தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# குழுமாயி அம்மன் வழிபாட்டில் இசைக்கருவிகளின் பயன்பாடு

## The Use of Musical Instruments in Kuzhumayi Amman Worship

**பொ. மோகன் ராஜ்*, முனைவர் ப. டேவிட் சிவசெல்வன்**,**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், (பதிவு எண்: BDU2010630573), முதுகலைத் தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி A++), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது) திருச்சிராப்பள்ளி-620 017 Email: kannitamilan1@gmail.com

**உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி A++), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-620 017)

**P. Mohan Raj[1], Dr. P. David Sivaselvan[2],**

1.Full-time Ph.D. Scholar, (Registration No: BDU2010630573), Department of PG Tamil Studies, Bishop Heber College (Autonomous A++), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620 017

2.Assistant Professor, Department of PG Tamil Studies, Bishop Heber College (Autonomous A++), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620 017

**Abstract:**

The study, "The Use of Musical Instruments in the Worship of Kuzhumayi Amman," explores the cultural significance and use of musical instruments in the worship of the folk deity, Kuzhumayi Amman. It highlights the importance of "material culture studies" in understanding a society's traditions and way of life. The article focuses on three specific instruments: Tharai, Parai and Tamukku or kadinga.

The Tharai is a wind instrument made of bronze that is played during the deity's procession and when the deity is placed on and taken off the chariot. Historically, it was used to signal danger, communicate between groups, and announce the arrival of kings or deities. The Parai is an integral part of the festival, played from the beginning to the end, and especially during the ritual dance of the oracle. The Tamukku, a leather instrument, is considered the guardian deity Kuzhumayi Amman. It is made by the Paraiyar community and is believed to ward off evil spirits. The people who create the instrument also worship it in their homes after the festival, a practice that reflects a belief in the divine power residing within musical instruments, a notion also found in Sangam literature and among certain Dravidian tribes.

**Keywords**: Kuzhumayi Amman,  Worship, Tamukku

**ஆய்வுச் சுருக்கம்**

"குழுமாய் அம்மன் வழிபாட்டில் இசைக் கருவிகளின்  பயன்பாடு" என்ற ஆய்வு, நாட்டார் தெய்வமான குழுமாய் அம்மனை வழிபடுவதில் இசைக் கருவிகளின் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் ஆராய்கிறது. ஒரு சமூகத்தின் ம ரபுகளையும் வாழ்க்கை முறையையும் புரிந்துகொள்வதில் "பொருள்சார் ப ண்பாட்டு ஆய்வுகளின்" முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. இந்தக் கட்டுரை மூன்று குறிப்பிட்ட இசைக் கருவிகளில் கவனம் செலுத்துகிறது: தாரை,  பறை  மற்றும் தமுக்கு அல்லது கடிங்கா. தாரை ஒரு வெண்கலத்தால் செய்யப்பட்ட காற்றுக்

கருவியாகும். இது தெய்வ ஊர்வலத்தின் போதும், தெய்வம் தேரில் ஏற்றப்படும் போதும் இறக்கப்படும் போதும் இசைக்கப்படுகிறது. வரலாற்று ரீதியாக, இது ஆபத்தை உணர்த்தவும், குழுக்களிடையே தொடர்பு கொள்ளவும், மன்னர்கள் அல்லது தெய்வங்களின் வருகையை அறிவிக்கவும் பயன்படுத்தப்பட்டது. பறை திருவிழாவின் ஒருங்கிணைந்த பகுதியாகும்; இது ஆரம்பம் முதல் இறுதி வரை இசைக்கப்படுகிறது, குறிப்பாக அருள்வாக்கின் சடங்கு நடனத்தின் போது. தமுக்கு, ஒரு தோல் கருவியாகும், இது குழுமாய் அம்மனின் காவல் தெய்வமாக கருதப்படுகிறது. இது பறையர் சமூகத்தினரால் உருவாக்கப்படுகிறது, மேலும் தீய ஆவிகளை விரட்டும் என்று நம்பப்படுகிறது. கருவியை உருவாக்கும் மக்களும் திருவிழாவிற்குப் பிறகு அதைத் தங்கள் வீடுகளில் வழிபடுகிறார்கள். இம்முறை இசைக் கருவிகளுக்குள் தெய்வீக சக்தி குடிகொண்டிருக்கிறது என்ற நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. இக்கருத்து சங்க இலக்கியத்திலும் சில திராவிடப் பழங்குடியினரிடமும் காணப்படுகிறது.

**முக்கிய வார்த்தைகள்:** தாரை, குழுமாயி, பொருள்சார் பண்பாடு, தமுக்கு

**முன்னுரை**

மனித வளர்ச்சி நிலைகளுக்கும் அவர்கள் பயன்படுத்திய தொழில் முறைக்கருவிகளுக்கும் பொழுதுபோக்குக்கருவிகளுக்குமான தொடர்பு பிரிக்கமுடியாதது. மனித நாகரிக வளர்ச்சிக்கு தொழிற்கருவிகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. பழைய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கைக்கோடரிகள், புதிய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பானைகள் போன்றவை உணவு சேகரிப்பிலும் மனித வாழ்க்கை முறையிலும் ஏற்படுத்திய மாற்றங்களைக் கொண்டு இக்கருவிகளின் பங்களிப்பை நாம் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட கருவிகளின் மூலம் அக்காலத்தில் நிலவிய வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளலாம். இது போன்ற பொருள்களை மனித சிந்தனைகளைத் தாங்கி நிற்கும் கலைவடிவங்கள் எனலாம். எனவே, அக்கால மனிதர்கள் பயன்பாட்டிற்காக உருவாக்கிய கருவிகள் பிற்காலத்தில் மானிடவியலாளர்களால் பண்பாட்டை விளங்கிக் கொள்ளும் ஆய்வுகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்ற ஆய்வுகளை பொருள் சார் பண்பாட்டு ஆய்வுகள் என அறிஞர்கள் குறிப்பிடுவர். நாட்டார் தெய்வங்கள் பற்றிய ஆய்வில் வழிபடு தெய்வம், வழிபாட்டிடம், வழிபடுவோர், வழிபாட்டு முறைகள் போன்றவையே முதலிடம் பெறுகின்றன. இவையன்றி வழிபாட்டில் இடம்பெறும் புழங்குப் பொருள்களும் கவனிக்கத்தக்கவை. நாட்டார் வழிபாட்டில் இடம்பெறுகின்ற புழங்குப் பொருள்களுள் இசைக்கருவிகளும் அடங்கும். குழுமாயி அம்மன் வழிபாட்டில் இடம்பெறுகின்ற தாரை, பறை, கடிகா போன்ற இசைக்கருவிகளையும் அக்கருவிகளின் பயன்பாட்டையும் விளக்க முற்படுவதே இவ்வாய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொருள் சார் பண்பாடு**

பண்பாடு எனும் முழுமையை விளங்கிக் கொள்ள பண்பாட்டின் மிகச்சிறிய அலகான பண்பாட்டுக் கூறுகள் என்பவை (Cultural Traits) மிகவும் துணை செய்யும். பொருள்சார் பண்பாடும்(Material culture) பண்பாட்டை புரிந்துக்கொள்ள உதவும் ஒரு கூறு (Trait) எனலாம்.

பொருள்சார் பண்பாடு என்பதனை பொருள் உருவாக்கும் பண்பாடு என்றும் பண்பாடு உருவாக்கும் பொருள் எனவும் கொள்ளலாம். இக்கூற்றின் மூலம் பொருள்சார் பண்பாடு எனும் கருத்தாக்கத்தை புரிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட பொருளானது அதன் பயன்பாட்டுத் தேவையை மட்டும் நிறைவு செய்வதில்லை. அவை, பண்பாட்டின் தேவையையும் நிறைவு செய்கிறது. இதன் பின்னணியில் நாம் இசை எனும் மனவடிவங்ககளை தாங்கி நிற்கும் பொருள் வடிவங்களாக இசைக் கருவிகளைக் குறிப்பிடலாம்.

**தமிழிசை**

கலைகளுள் தொன்மையான கலை வடிவமாக இசையைக் குறிப்பிடலாம். இசை, இசைக்கருவிகளின் பயன்பாடு ஆகியவை உலகம் முழுதும் காணப்படும் பண்பாட்டு பொதுமைகள். தமிழிசையைப் பொருத்தவரை இதன் காலத்தை ந.மம்மது அவர்கள் இவ்வாறு வரையறுக்கிறார்.

நரம்பின் மறை என்பது இசைநூல். அதாவது தொல்காப்பியத்திற்கு முன்பே இசை நூல்கள் இருந்திருக்கின்றன. பேரெல்லையாக தமிழிசைக்கு ஐயாயிரம் ஆண்டுகளையும் சிற்றிலையாக ஈராயிரம் ஆண்டுகளையும் சொல்லலாம். (தமிழிசை வேர்கள் ந.மம்மது ப.1)

தமிழ்ப் பண்பாட்டில் இசையின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. இசைக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம் கருப்பொருளாக பறையையும் யாழையும் குறிக்கப்பிடுகிறது. அது மட்டுமின்றி, ஐந்திணைகளுக்கும் தனித்தனியான பறை, பண், யாழ் போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை, தமிழ்ப்பண்பாட்டில் இசைக்கலையின் செழுமையை உணர்த்துவதாகக் கொள்ளலாம். சங்கப் பாடல்கள் பலவற்றிலும் இசை பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. கலித்தொகையும் பரிபாடலும் இசையோடு தொடர்புடைய நூல்கள் எனக்கருதலாம். இதனைத் தொடர்ந்து சிலப்பதிகாரம் இசைப் பற்றிய விரிவான குறிப்புகளைக் கொண்டு அமைகிறது. சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையும் அரங்கேற்ற காதையும் இசைத் தொடர்பான பல செய்திகளைத் தருகின்றன. எடுத்துக்காட்டாக முழவு ஆசிரியர் இலக்கணம், குழல் ஆசிரியர் இலக்கணம், யாழ் ஆசிரியர் பற்றிய விளக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். பின்னாள்களில் திருமுறைகள், ஆழ்வார் பாசுரங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழிசையின் மரபு தொடர்ந்து வந்தது எனவும் கூறலாம்.

பிற்காலத்தில் கர்நாடக இசை எனும் பெயரில் தமிழிசை அழைக்கப்பட்டு இசைக் கலைச்செல்வங்கள் வடமொழியிலும் தெலுங்கிலும் மடைமாற்றம் செய்யப்பட்டன. தமிழ் மறுமலர்ச்சிக் காலக் கட்டத்தில் சிலப்பதிகாரத்தின் முதல் பதிப்பு அச்சிடப்பட்டது. அதில் இடம்பெற்றிருந்த இசைக்

குறிப்புகள் வழியே தமிழிசையின் வேர்களை நோக்கிய தேடலை அறிஞர்கள் முன்னெடுத்தனர். ஆபிரகாம் பண்டிதர், விபுலாநந்தர் போன்றோர் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் கர்நாடக சங்கீதம் என்று அழைக்கப்படுவது தமிழிசையே என்று சான்றோர்களுடன் நிறுவினர். பிற்காலத்தில் வீ.ப.கா.சுந்தரம், ந. மம்மது, செ. அ. வீரபாண்டியன் போன்றவர்களும் அப்பணியை மேற்கொண்டனர் எனலாம்.

## இசைக்கருவிகள்

இசைக் கலையை போன்று இசையை உண்டாக்கும் இசை கருவிகளும் தொன்மையானவை. உலகில் கண்டெடுக்கப்பட்ட பழமையான இசைக்கருவி குழலே. ஸ்லோவேனியாவில் 1995 இல் கண்டெடுக்கப்பட்ட அக்குழல் நியாண்டர்தால் மனிதர்கள் பயன்படுத்தியது என்றும் அதன் காலம் ஏறக்குறைய 60 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம் எனவும் அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்,

தமிழ்ப் பண்பாட்டைப் பொறுத்தவரை தோலிசைக் கருவியான பறை, நரம்பிசைக் கருவியான யாழ், காற்றிசைக் கருவியான குழல் போன்றவை முதன்மையானவை எனலாம். யாழ் பயன்பாட்டை இன்று தமிழ் மக்கள் இழந்துவிட்ட நிலையில் பறை, குழல் ஆகியவற்றின் இசைப் பயன்பாடு இன்றும் தொடர்ந்து வருகிறது. அதிலும் சிறப்பாகப் பறை இசைக் கருவியின் பல்வேறு வகை வடிவங்கள் தற்காலத்திலும் பயன்பாட்டில் நிலவுவதைக் காணலாம். தமிழ் நாட்டில் பல்வேறு வகை இசைக்கருவிகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இக்கட்டுரை குழுமாயி அம்மன் எனும் நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் இசைக்கருவிகளைப் பற்றியும் அதன் பண்பாட்டுப் பின்புலத்தை அறியும் முயற்சியாகவும் அமைகிறது.

## குழுமாயி அம்மன்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் புத்தூரின் ஊர் தெய்வம் குழுமாயி அம்மன். இத்தெய்வத்தின் கோயில் உய்யக்கொண்டான் வாய்க்காலின் கரையில் அமைந்துள்ளது. வாய்க்காலின் குழுமியில் கண்டெடுக்கப்பட்டதால் குழுமாயி அம்மன் என அழைக்கப்படுகிறது. மாசி மாத செவ்வாய்க்கிழமையில் தொடங்கும் திருவிழா சனிக்கிழமை வரை நடைபெறுகிறது. இத்திருவிழாவில் புத்தூர் ஊர் மக்கள் மட்டுமின்றி மாவட்டத்தின் பல்வேறு மக்களும் கலந்து கொண்டு வழிபடுகின்றனர். திருவிழாவின் முக்கிய நிகழ்வாக குட்டிக்குடித்தலைக் குறிப்பிடலாம். மருளாளி என்பவர் பலியிடப்படும் ஆட்டுக்குட்டிகளின் குருதியைக் குடிக்கும் நிகழ்வே குட்டிக் குடித்தல் எனப்படும்.

குழுமாயி அம்மன் திருவிழாவில் பல்வேறு பொருள்சார் பண்பாட்டு கூறுகள் இடம் பெறுகின்றன. அவற்றில் இசைக்கருவிகளும் அடங்கும். நாட்டார் தெய்வ வழிபாட்டில் இசை, இசைக்கருவிகளின் பங்களிப்பு போன்றவை ஆய்விற்குரியன.

தொட்டியம் மதுரைக்காளியம்மன் மதுரையிலிருந்து தொட்டியத்துப் பறையனின் பறையிசைக்கு மயங்கித் தொட்டியத்திற்கு வந்ததாக இத்தெய்வ வரலாறு பேசுகிறது. காத்தவராயனின் கின்னர

இசைக்கு மயங்கி ஆரியமாலை காதல் கொண்டதாகக் காத்தவராயன் வரலாறு கூறுகிறது. (மாறி வரும் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் ப.92)

என்ற அரு. மருதத்துரை அவர்களின் கூற்றையும் நாம் பொருத்திப் பார்க்கலாம். தொட்டியம் மதுரக்காளியம்மன் திருவிழாவில் பறைக்கும் அக்கருவியை இசைக்கும் பறையர் சமூக மக்களுக்கும் முதன்மையான பங்களிப்பு அளிக்கப்படுகிறது. இதே போல், குழுமாயி அம்மன் வழிபாட்டில் இடம்பெறும் இசைக்கருவிகளான தாரை, பறை, ஒற்றைத் தமுக்கு போன்ற இசைக்கருவிகளின் பயன்பாடு மற்றும் பண்பாட்டுக் கூறுகளை அறிவது இத்தெய்வம் பற்றிய வழிபாடு மற்றும் வரலாற்றில் மேலும் சில முடிவுகளைப் பெற உதவும்.

**தாரை**

இது ஒரு காற்றிசைக் கருவி. பொதுவாக வெண்கலத்தால் செய்யப்படுகிறது. இதன் அமைப்பை இவ்வாறு வரையறுக்கலாம்.

சுமார் 12 அடி நீளத்தில், ஊதும்பகுதி சிறுத்தும் இடைப்பகுதி மேல்நோக்கி வளைந்தும், அடிப்பகுதி அகன்றும் காணப்படும் வித்தியாசமான பழந்தமிழ் ஊதுக்கருவியே தாரை. (வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள் ப.64)

நீண்ட தாரையும் அதனைத் தாங்கிப் பிடித்துக்கொள்ள ஒரு கம்பும் பயன்படுத்தப்படுகிறது. அக்கம்பின் உதவியோடு தாரையைப் பிடித்துக் கொண்டு தாரையின் ஒரு முனையில் காற்று பலமாக ஊதப்படுகிறது. தாரையின் மறுமுனையில் இசையாக ஒலிக்கிறது. இது நெடுந்தாரை என அழைக்கப்படுகிறது. வளைந்துக் காணப்படும் தாரை கோணத்தாரை அல்லது கொம்புத் தாரை என அழைக்கப்படுகிறது. தாரை இசைக்க பலமாக ஊத வேண்டும், இதற்கு மிகுந்த ஆற்றல் தேவைப்படுகிறது.

சேக்கிழார் எழுதிய திருத்தொண்டர் புராணத்தில் தாரை குறிப்பிடப்படுகிறது. இக்கருவியை எக்காளம் என்றும் அழைப்பர் என்பதை தமிழிசைக் கலைக் களஞ்சியம் வழி அறிய முடிகிறது. இதே போல், திருமுறையில் பல பாடல்களில் கோயிலில் இசைக்கப்படும் பல்வேறு இசைக்கருவிகளை குறிப்பிடும் போது தாரையும் குறிப்பிடப்படுகிறது. வீ.ப.கா.சுந்தரம் அவர்களின் தமிழிசைக் கலைக்களஞ்சியம் நூலில் இடம்பெறும் பின்வரும் கருத்து கவனிக்கத்தக்கது.

ஞானசம்பந்தரின் வருகையை அறிவிப்பதற்குத் தாரை என்னும் ஊது கருவியைப் பயன்படுத்தி வந்தார்கள். அரசன் வருகையைத் தாரை ஊதி அறிவிக்கும் பண்டைய மரபுக்கு ஏற்ப அடியவர் வருகையை ஊது கருவியால் அறிவித்தனர்.

புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார்

முன்னே

இணைந்த நித்திலத்து இலங்கொளி நலங்கிளர்

தாரை

அணைந்த மாமறை முதற்கலை அலைமும் ஓதாது

உணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தானென ஊத (பெரிய பு. சம். 223) ( தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப. 272 )

மற்றொரு பாடலில் சின்னம் எனும் இசைக்கருவியோடு தாரைக் குறிப்பிடப்படுகிறது. தாரையின் சிறு வடிவம் சின்னம் என அழைக்கப்படுகிறது.

சின்னம் தனிக்கானம் தாரை சிரபுரத்து
ஆண்டகை வந்தார்
என்னும் தகைமை வினங்க ஏற்ற
திருப்பெயர் சாற்ற
முன்ளம் மருங்கும் நிரந்த முரசுடைப்
பல்லியம் ஆர்ப்ப மன்னும்
திருத்தொண்டர் ஆனார்
வந்தெதிர் கொண்டு வணங்க (பெரிய.பு.சம்.28 ) ( தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப. 314)

இப்பாட்டில் சின்னத்தோடு தாரை எனும் இசைக் கருவியை இணைத்து கூறும் அறிஞர் வீ. ப. கா சுந்தரம் அவர்களின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

சின்னம்: இஃதோர் சிறிய ஊதுகொம்பு. இதனைப் பாலை நிலத்தில் வழிப்பறிப்போர் பயன்படுத்தினர். சூறைகொள்ளும்பொழுது தம் தோழர்களைத் துணைக்கு அழைத்தற்கும், சூறை கொண்டபின் ஆடிப்பாடி மகிழ்தற்கும் சின்னத்தைப் பயன்படுத்தினார்கள். பாலை நிலத்தின் மறவர்கள் தம் தெய்வமாகிய காளியைப் பூசித்து வழிபடும்போது ஊதுசின்னமும், துத்தரிக் கொம்பும், குழிக்குழலும், எறிமணியும், பறையும் முழக்குவார்கள்.

ஆறெறி பறையும் சூறைச் சின்னமும்
கோடுங் குழலும் பீடுகெழு மணியும்
கணங்கொண்டு துவைப்ப வணங்கு முன்னிறிஇ (சிலப்.19:40-42) ( தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 2, ப. 314 )

சின்னம் எவ்வாறு கொற்றவை வழிபாட்டில் சிறப்பிடம் பெறுகிறதோ அது போல தாரை தற்கால பெண் தெய்வ வழிபாட்டில் குறிப்பாக பிடாரி வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

குழுமாயி அம்மன் வழிபாட்டில் தெய்வம் வீதியில் உலா வரும் போது, தேருக்கு முன்பாக நெடுந்தாரை ஊதப்படுகிறது. சில வேளைகளில் குழுமாயி அம்மனை நோக்கியும் ஊதப்படுகிறது. இது மட்டுமின்றி குழுமாயி அம்மனை தேரில் ஏற்றும் போதும் இறக்கும் போதும் தாரை இசை ஒலிக்கப்படுகிறது.

தொடக்கத்தில் இக்கருவி ஆபத்தை உணர்த்தும் குறியீட்டு ஒலியாகவும், குழுக்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றச் சத்தமாகவும் பயன்பட்டதாக சொல்கிறார் டாக்டர். சுப்புலட்சுமி. பிற்காலத்தில் சுவாமி புறப்பாடு மற்றும் விழாக்களை அறிவிக்க, அரசர் வருகையை உணர்த்த இசைக்கப்பட்டது. (வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள் ப.65)

குழுமாயி அம்மன் வழிபாட்டில் திருவிழா முடிந்து தெய்வம் குடிபுகும் வரை தாரை உடன் வருகிறது. பார்ப்பனர்கள் வாழும் அக்ரகாரப் பகுதியில் தாரையின் பயன்பாடு தடை செய்யப்படுவதில்லை. இப்பகுதியில் மட்டும் கூடுதலாக நான்கு தாரைகள் பயன்படுத்தப்படுகின்றன.

இக்கருவி, மத்திய பிரதேசத்தில் கோஹிக் என்ற பெயரிலும் உத்திரப் பிரதேசத்தில் துரி என்ற பெயரிலும் கர்நாடகத்தில் பாங்கு என்ற பெயரிலும் குஜராத்தில் நாகபாணி என்ற பெயரிலும் ஒரிசாவில் கஹல் என்ற பெயரிலும் கங்கை சமவெளி பிரதேசத்தில் கர்ண என்ற பெயரிலும் மிகச்சிறிய மாற்றங்களோடு பரவலாகப் புழக்கத்தில் இருக்கிறது. (வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள் ப.66)

எனத் தாரையின் பல வடிவங்கள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் காணப்படுவதை வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள் எனும் நூலில் நூலாசிரியர் வெ. நீலகண்டன் குறிப்பிடுகிறார்.

**பறை**

தமிழ் இசை மரபின் அறுபடாத பண்பாட்டு தொடர்ச்சிக்கு பறை எனும் இசைக்கருவியே சான்று. தமிழ் மரபின் தவிர்க்க முடியாத பண்பாட்டுப் பொருளாக பறை இருந்து வருகிறது. தொல்காப்பியம் ஐந்திணைகளுக்கும் ஐவகைப் பறைகளைக் குறிப்பிடுகிறது. அரச நிர்வாகத்திலும் போர்களிலும் பறையின் பயன்பாடு இன்றியமையாததாய் இருந்து வந்துள்ளது.

நிறுவன சமயம் முதல் நாட்டார் சமயம் வரை கிட்டதட்ட அனைத்து தெய்வங்களும் பறையிசையை விரும்புபவையாகவே உள்ளன. குழுமாயி அம்மன் வழிபாட்டிலும் பறையின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. காப்புக் கட்டி திருவிழா தொடங்குகிறது அது முதல் குடிபுகும் வரை பறை இசைக்கப்படுகிறது. இடையிடையே மருளாளி ஆடும் போதும் அருள்வாக்கு கூறும் போதும் பறை கூடுதலாக இசைக்கப்படுகிறது. இப்போதெல்லாம் பெரும்பாலும் 'பைபர்' பறைகளே பயன்படுத்தப்படுகிறது. தோல் பறையின் விலையும் எளிதில் கிடைக்காமையுமே இதற்கு காரணமாகக் கூறப்படுகிறது. குழுமாயி அம்மன் வழிபாட்டில் பறையையொத்த மற்றொரு தோலிசைக் கருவியான தமுக்கு இசைக்கப்படுகிறது.

**ஒற்றைத் தமுக்கு**

இது ஒரு தோலிசைக் கருவி ஆகும். குழுமாயி அம்மன் வழிபாட்டில் இதனை ஒற்றைத் தமுக்கு அல்லது கடிங்கா என அழைக்கப்படுகிறது. இதைப் போன்ற தோற்றத்தில் அமைந்துள்ள 'தமக்' எனும் சிறுபறை சந்தாலி பழங்குடிகளின் இசையில் தனித்துவமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. குழுமாயி அம்மன் வழிபாட்டில் உரிமைப் பணியாளர்களில் ஒருவரான பறையர்களே இக்கருவியை உருவாக்கித் தருகின்றனர். தற்போது ஆள்கள் பற்றாக்குறைக் காரணமாக வெளி ஆள்கள் மூலம் இவ்விசைக் கருவி இசைக்கப்படுகிறது. மாட்டின் தோலினால் செய்யப்படும் இக்கருவி சிறு சட்டி அளவினது. குழுமாயி அம்மன் வழிபாட்டில் காப்புக் காட்டு முதல் குடிப்புகும் வரை இது இசைக்கப்படுகிறது. களப்பணியின் மூலம் இக்கருவிப் பற்றிய செய்திகள் திரட்டப்பட்டன.

இவ்விசைக் கருவியே குழுமாயி அம்மனின் காவல் தெய்வம் எனப்படுகிறது. இக்கருவியை இசைக்கும் போது கெட்ட ஆவிகள் இசைப்பவரை தாக்கும் எனவும் அதற்கு இடம்தரமால் தொடர்ந்து இசைக்க வேண்டும் எனவும் கூறுகின்றர். இதற்கு சிறப்பு பெயராக கடிங்கா என்ற பெயர் வழங்கக்கப்படுவது வியப்பை அளித்தது. ஏனெனில், முன்னோர் வழிபாடு பற்றிய ஆய்வில் ஆ. சிவசுப்ரமணியன் 'கடிகா' எனும் காவல் மரத்தைப் பற்றியும் குலக்குறியாக அதன் வழிபாடு பற்றியும் கூறுகிறார். இப்பெயர் ஒற்றுமை மேலும் ஆய்விற்குரியது. இவ்விசைக் கருவியை வழங்கும் பறையர் சமூக மக்கள் திருவிழா முடிந்ததும் அதைப் பெற்று தமது வீட்டு பூசையறையில் வழிபடுகின்றனர். திருமணம் போன்ற நிகழ்வின் போது கடிங்கா வணங்கக்கப்படுகிறது. இசைக்கருவிகளில் தெய்வம் உறையும் என்ற நம்பிக்கை சங்க காலத்திலே நிலவியுள்ளது என்பதை பக்தவத்சல பாரதி பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறார்.

அணங்கு ஓர் உயிரப்பாற்றல் தான். அது யாழ் எனும் இசைக்கருவியில் இருந்ததாகவும் பெண்களின் அழகிய மார்பகங்களில் இருந்ததாகவும் வீரர்களின் போர்க்கருவியில் உறைந்திருந்ததாகவும் (சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர். இலக்கிய மானிடவியல் ப.179)

சோட்டா நாகாபூரி பகுதிகளில் வாழும் திராவிடப் பழங்குடிகளில் ஒரு பிரிவினாரான ஒரோவோன் பழங்குடிகளிடம் இன்றும் இது போல இசைக் கருவிகளை வழிபடும் முறை நிலவுவதைக் காண முடிகிறது. ஒரோவோன் சாதியைச் சேர்ந்த ஒருவன் ஒரு புதிய பறையையோ நரசிங்கா எனும் குழலையோ வாங்கினால், அதற்கு குங்குமம் பூசுவதை ஒரு சடங்காக நடத்துகிறான். இதை அந்தப் பொருளின் பேஞ்சர் அல்லது திருமணம் என்று கருதுகிறான். இத்தகைய ஆயுதங்களையும் இசைக் கருவிகளையும் சூட்சுமமான உயிருள்ள பொருள்களாக அச்சாதியினர் கருதுகின்றனர். சடங்குகள் புரிவதன் மூலம் அக்கருவிகளின் மந என்ற ஆத்ம சக்தியுடன் உறவு கொண்டு அதைத் தமக்கு நன்மை பயக்குமாறும், கெடுதி செய்யாதவாறும் திருப்தி செய்யலாம் என்றும் அவர்கள் நம்புகின்றனர். (இசைக்கருவிகள் ப.45)

ஒற்றைத் தமுக்கு அல்லது கடிகா என்றழைக்கப்படும் தொன்மையான இசைக் கருவியை மேலும் ஆய்வு செய்வதன் மூலம் சில பண்பாட்டுக் கூறுகளை நாம் அடையாளம் காணலாம்.

**முடிவுரை**

குழுமாயி அம்மன் எனும் நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் இசைக்கருவிகளான தாரை, பறை, ஒற்றை தமுக்கு போன்றவற்றைப் பற்றிய பண்பாட்டு பின்னணியை அறிய முடிகிறது. தாரை இந்திய நிலப்பகுதி முழுவதும் இசைக்கப்படுவதையும் தமிழ்நாட்டில் நாட்டார் தெய்வ வழிபாட்டில் இசைக்கப்படுவதையும் அறிய முடிகிறது. பறை இசைக்கருவி நாட்டார் தெய்வ வழிபாட்டில் தவிர்க்க இயலாத பண்பாட்டு பின்னணி கொண்டது என்பதையும் அறிய முடிகிறது. ஒற்றைத் தமுக்கு எனும் சிறு பறையின் பயன்பாடு நாட்டார் தெய்வ வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. ஒற்றைத் தமுக்கின் பயன்பாட்டையும் அதன் சடங்கியல் முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது.

ஒற்றைத் தமுக்கு பற்றிய மேலாய்வு அது பயன்பாட்டில் எச்சமாக இன்றும் நிலைத்திருப்பதன் பண்பாட்டு பின்னணியை வெளிப்படுத்தும்.

**துணைநூற் பட்டியல்**


1. சுந்தரம். வீ. ப. கா, தமிழிசைக் கலைக்களஞ்சியம், தொகுதி 1&2 பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, 2006.
2. சைதன்ய தேவ. பி, இசைக்கருவிகள், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, புதுதில்லி, 2004.
3. நீலகண்டன். வெ, வாழ்விழந்து வரும் கிராமிய இசைக் கருவிகள், பிளாக்ஹோல் மீடியா பப்ளிகேசன், 2004.
4. பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், 2020.
5. மம்மது. ந, தமிழிசை வேர்கள், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி, 2009.
6. மருதத்துரை. அரு, மாறி வரும் நாட்டுப்புறவியல் ஆய்வுகள், தன்னானே பதிப்பகம், சென்னை, 2004.


**References:**


1. Sundaram, V. P. Ka. (2006). *Tamil Isai Kalaikkalanjiyam (Encyclopedia of Tamil Music), Volumes 1 & 2*. Tiruchirappalli: Bharathidasan University.
2. Chaitanya Dev, B. (2004). *Isaikkaruvigal (Musical Instruments)*. New Delhi: National Book Trust, India.
3. Neelakandan, V. (2004). *Vazhvilandhu Varum Gramiya Isaik Karuvigal (Fading Rural Musical Instruments)*. Blackhole Media Publication.
4. Bhakthavatsala Bharathi. (2020). *Ilakkiya Maanidaviyal (Literary Anthropology)*. Puttanatham: Adaiyalam Pathippagam.
5. Mammudhu, N. (2009). *Tamizhisai Vergal (Roots of Tamil Music)*. Pollachi: Ethir Veliyeedu.
6. Marudathurai, Aru. (2004). *Maari Varum Naattupuraviyal Aayvuugal (Changing Folklore Studies)*. Chennai: Thannane Pathippagam.



License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.